05.02.2026.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண். 259/2025</u>

அ.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.தேவசேனா | | |
| த/பெ | ராஜேந்திரன் | | |
| கிராமம் | விழுப்புரம் | தொழில் | தலைமை காவலர் |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 35/2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 05.02.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கண்டமங்கலம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 16/10/2022-ஆம் தேதி தாலுக்கா காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்தேன். உதவி ஆய்வாளர் சத்யா, காவலர் இளவேந்தன், ஆகியோர் அன்று காலை 11 - 30 மணிக்கு எங்களது காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட ஜானகிபுரம் ஜங்ஷன் அருகில் வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, TN.32AS9424 என்ற பதிவெண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா இரு சக்கர வாகனத்தில் ஒரு வெள்ளை பையுடன் வந்தவரை மடக்கி விசாரிக்க எத்தனித்தபோது, அவர் இருசக்கர வாகனத்தை கீழே போட்டுவிட்டு தப்பித்து ஓடிவிட்டார். அந்த வெள்ளைப் பையை சோதனை செய்ய அதில் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட குட்கா மற்றும் புகையிலை பொருட்கள் சுமார் 14.5 கிலோ கிராம் எடையுள்ள HANS பாக்கெட் - 600 பாக்கெட் (40 x 15), Cool lip - 80 பாக்கெட் (8 x 10), V1 Tobacco - 20 பாக்கெட் ஆகியவற்றின் மதிப்பு ரூ.14,500/- இருக்கும். மேலும் அவரைப் பற்றி விசாரித்த போது, அவரது பெயர் தீனதயாளன் தந்தை பெயர் கிருஷ்ணமூர்த்தி மேற்கு தெரு, மேலமங்கலம்,

திருவெண்ணைநல்லூர் தாலுக்கா என்று தெரியவந்தது. அவரைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். அவர் தற்போது நீதிமன்றத்தில் உள்ள எதிரி தான். சாட்சி அவரை சரியாக அடையாளம் காட்டினார். மேலும் மேற்படி பொருட்களையும், அவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தையும், அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் அவர்கள் 11.45 மணி அளவில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றிக் கொண்டார்கள். அதில் நானும், முதல் நிலை காவலர் 2332 இளவேந்தனும் கையொப்பம் செய்தோம். கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் 13.00 மணிக்கு காவல் நிலையம் ஆஜரானோம். கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையதாகும். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆகும். மேலும் HANS - 600 பாக்கெட், Cool lip - 80 பாக்கெட், V1 Tobacco - 20 பாக்கெட் ஆகியவைகளையும், மேலும் அந்த இருசக்கர வாகனம் ஹோண்டா ஆக்டிவா பதிவு எண் TN-32AS-9424 ஆகியவைகளை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். சாட்சி அவைகளை சரியாக அடையாளம் காண்பித்தார். அதில் 1 முதல் 3 வரையிலானவைகள் சா.பொ.1 முதல் சா.பொ.3 வரையிலானவை ஆகும். மேலும் ஆக்டிவா வாகனத்திற்கான 3 புகைப்படங்கள் சா.பொ.4 ஆகும். காவல் நிலையம் சென்று உதவி ஆய்வாளர் அவர்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, எங்களை விசாரணை செய்தார்கள். நாங்கள் நடந்தவைகளை சொல்லிக் கொண்டோம்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

**மறுவிசாரணை**

**இல்லை**